**தலைப்பு 161 – நிரந்தர அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சு தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2015**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

தலைப்பு 161 – நிரந்தர அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், ஏடுகள் பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2016 ஆகஸ்ட் 16 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு மற்றும் கொடுக்கல் வாங்கல் மாதிரிகள் மீதான போதியளவான தெரிவுச் செவ்வை பார்த்தல் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அம் மீளாய்வினதும் செவ்வைபார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் எனக்குக் கிடைக்கப்பெற்றுள்ள பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வினை மேற்கொள்ளக்கூடிய வகையில் தயாரிக்கப்பட்டிருந்தன.

**1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு**

-----------------------------------------------------------------------------------------------------------------------------------------------

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், பொது நிதி மற்றும் நிர்வாக ஒழுங்குவிதிகள் என்பவற்றிற்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகளையும் இணக்கக் கூற்றுக்களையும் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், அமுலாக்குதல் மற்றும் பேணுதல் என்பன இந்த பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

**2 கணக்குகள்**

----------------------

**2.1 ஒதுக்கீட்டுக் கணக்கு**

--------------------------------------

**(அ) மொத்த நிதி ஏற்பாடும் செலவினமும்**

-----------------------------------------------------------------

திணைக்களத்திற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடு ரூபா 117.63 மில்லியனாக இருந்ததுடன், மீளாய்வாண்டின் இறுதியளவில் இதில் ரூபா 103.30 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் திணைக்களத்திற்கு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த தேறிய நிதி ஏற்பாடுகளிலிருந்து ரூபா 14.33 மில்லியன் அதாவது 12.18 சதவீத நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| செலவினம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு<br>தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்புக்கள் | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| மீண்டெழுபவை | 100.70 | 91.15 | 9.55 | 9.48 |
| மூலதனம் | 16.93 | 12.15 | 4.78 | 28.23 |
| மொத்தம் | **117.63** | **103.30** | **14.33** | **12.18** |

**2.2 முற்பணக் கணக்கு**

**2.2.1 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சிற்குரிய 16101 ஆம் விடய இலக்கத்தின் கீழ் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்பட்டுள்ளன.

| செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| அதிகூடிய எல்லை | உள்ளவாறானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானது | அதிகூடிய எல்லை | உள்ளவாறானது |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 1.89 | 1.37 | 0.45 | 2.10 | 25.00 | 12.88 |

**2.3 கட்டுநிதி கணக்கு**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் கீழான 7002/0000/00/418/0015/000 ஆம் இலக்க கட்டுநிதிக் கணக்கின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 11 மில்லியனாக இருந்தது.

**2.4 பொது வைப்புக் கணக்கு**

2015 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அமைச்சின் கீழான 03 வைப்புக் கணக்குகளின் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 29.04 மில்லியனாக இருந்தன. விபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| வைப்புக் கணக்கின் இலக்கம் | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|
| | ரூபா மில்லியன் |
| 6000/0000/00/0013/0104/000 | 28.87 |
| 6000/0000/00/0016/0097/000 | 0.13 |
| 6000/0000/00/0018/0100/000 | 0.04 |
| மொத்தம் | 29.04 |

### 2.5 கணக்காய்வு அவதானிப்புக்கள்

நிரந்தர அபிவிருத்தி மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் 2015 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் மேற்படி 1.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளுக்கு உட்படத் திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தன. அம் முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கைகளில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் 3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ளன.

## 3. பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள்

### 3.1 பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற சில பதிவேடுகள் பேணப்படாதிருந்ததுடன், சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணம் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (i) | கணனிகள், உப பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | பிணைப் பதிவேடு | நிதிப் பிரமாணம் 891(1) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | மின் உபகரணங்கள் தொடர்பான பதிவேடு | நிதிப் பிரமாணம் 454(2) | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | பொறுப்புக்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 214 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (v) | அடியிதழ்சேர் புத்தகங்கள் பதிவேடு | நிதிப் பிரமாணம் 341 | பேணப்பட்டிருக்கவில்லை. |
| (vi) | வாகன நிரற்படுத்தல் பதிவேடு | நிதிப் பிரமாணம் 1647(உ) | பேணப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| (vii) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| (viii) | வாகன சம்பவக் குறிப்புப் புத்தகம் | நிதிப் பிரமாணம் 1645(அ) | நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 3.2.1 பாதீட்டு முரண்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 03 செலவின விடயங்களிற்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 847,305 தொகையான நிதிஏற்பாடு மீளாய்வாண்டின் போது பயன்படுத்தப்படாமையால் மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடு முழுவதும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 17 செலவின விடயங்களுக்கு மிகை நிதி ஏற்பாடு செய்யப்பட்டமையால் நிதி ஏற்பாட்டினைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்கள் தேறிய ஏற்பாட்டின் 11 சதவீதத்திற்கும் 98 சத வீதத்திற்கும் இடைப்பட்ட வீச்சினைக் கொண்டிருந்தது.

### 3.3 கட்டுநிதி கணக்கு

அமைச்சினால் 2016 ஏப்ரல் 30 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்படாதிருந்த கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சின் உப கட்டுநிதி மீதி ரூபா 29,000 ஆக இருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

2015 திசெம்பர் 31 ஆந் திகதியிளவில் ரூபா 29 மில்லியனான காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணம் 570 இன் பிரகாரம் அட்டவணையொன்றும் காலப்பகுப்பாய்வொன்றும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்கக் கூற்று

16101 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணக்கக் கூற்று தொடர்பாக தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 16101 ஆம் விடய இலக்க அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பாக 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம் அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,091,833 ஆக இருந்ததுடன், அந் நிலுவை மீதிகள் 06 மாதங்கள் முதல் 12 மாதங்கள் வரையான காலவீச்சில் முன்கொண்டுவரப்பட்டிருந்த போதிலும், அந்நிலுவைக் கடன் மீதிகளை அறவிடுவதின் பின்தொடர் நடவடிக்கைகள் பலவீனமான நிலைமையில் காணப்பட்டது.

(ஆ) சீசீ 10 அங்கத்தவர் கடன் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 125,965 தொகையான கடன் மீதியொன்று தனியாள் மீதி வகைப்படுத்தலில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### 3.6 சொத்துக்கள் முகாமைத்துவம்

அமைச்சின் சொத்துக்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) விளைவற்றதும் குறைவான பயன்பாடுடையதுமான சொத்துக்கள்

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ளவாறு சில சொத்துக்கள் விளைவற்றோ அல்லது குறைப்பயன்பாட்டிற்குட்பட்டோ இருந்ததாக தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | சொத்து வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றும் குறைப் பயன்பாட்டுடனும் காணப்பட்ட காலப்பகுதி |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | அலுவலக உபகரணங்கள் | 62 | இனங்காணப்பட்டிருக்கவில்லை | இனங்காணப்பட்டிருக்கவில்லை |
| (ii) | கணனி மற்றும் உபபாகங்கள் | 103 | இனங்காணப்பட்டிருக்கவில்லை | இனங்காணப்பட்டிருக்கவில்லை |

#### (ஆ) ஏனைய நிறுவனங்களிடமுள்ள சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்துதல்

ஏனைய நிறுவனங்களுக்குச் சொந்தமான சில சொத்துக்கள் முறையான அங்கீகாரமொன்றில்லாமல் அமைச்சினால் பயன்பாட்டிற்கு எடுக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறு.

| | சொத்து வகை | சொத்துக்கள் உரித்தாக இருந்த நிறுவனம் | எண்ணிக்கை, அலகுகளின் எண்ணிக்கை அல்லது அளவு |
|---|---|---|---|
| (i) | மோட்டார் வாகனங்கள் | வனசீவராசிகள் வளங்கள் பாதுகாப்பு அமைச்சு | 05 |
| | | தாவரவியல் பூங்காக்கள் மற்றும் பொது பொழுது போக்குகள் அலுவல்கள் அமைச்சு | 06 |
| | | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 04 |
| | | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 01 |
| | | அரச முகாமைத்து மறுசீரமைப்பு அமைச்சு | 01 |
| | | கமநல சேவைகள் மற்றும் வனசீவராசிகள் அமைச்சு | 03 |
| | | சட்டவாக்க அலுவல்கள் அமைச்சு | 02 |
| | | வனசீவராசிகள் திணைக்களம் | 01 |
| | | சுற்றாடல் அமைச்சு | 01 |
| (ii) | அலுவலக உபகரணங்கள் | வீதி அபிவிருத்தி அதிகாரசபை | 01 |

(iii) கணனி மற்றும் வீதி அபிவிருத்தி அதிகாரசபை உபபாகங்கள் 02

**(இ) கையேற்கப்படாத சொத்துக்களை முறையற்ற விதத்தில் கையாளல்**

அமைச்சினால் அரச நிறுவனங்களுக்குச் சொந்தமான 13 வாகனங்கள் 2015 திசெம்பர் 31 ஆந் திகதி அளவிலும் பயன்படுத்தப்பட்டவாறு இருந்ததுடன் அதற்காக ரூபா 415,807 தொகை செலவிடப்பட்டிருந்தது.

**(ஈ) தீர்க்கப்படாத பொறுப்புக்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சினால் 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தீர்வு செய்யப்படாத 01 ஆண்டிற்கு குறைவான காலப்பகுதியிலிருந்து முன்கொண்டு வரப்படும் பொறுப்புக்கள் ரூபா 466,343 ஆக இருந்தது.

(ii) அமைச்சினால் 05 செலவின விடயங்களுக்காக மேற்கொள்ளப்பட்டிருந்த நிதி ஏற்பாடுகளைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்புக்களை மிகைத்து ரூபா 120,349 இற்கு பொறுப்புக்களுக்கு கடப்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

### 3.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலிவற்றுடனான இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுச் செவ்வையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பகுப்பாய்வு செய்து கீழே காட்டப்பட்டுள்ளன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | |
| (i) நிதிப் பிரமாணம் 104 | 2015 சனவரி மாதத்தில் இடம்பெற்ற விபத்தொன்று தொடர்பாக 2016 யூன் 13 ஆந் திகதி வரையிலும் ஆரம்ப பரிசோதனையொன்று மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கை அல்லது இறுதி அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப் பிரமாணம் 1642 | அமைச்சிற்குரிய வாகன விபத்துக்கள் தொடர்பாக பொலிஸ் அறிக்கை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

### 3.8 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சில கொடுக்கல் வாங்கல்கள் முறையற்றதாக இருந்தன. அவ்வாறான சில சந்தர்ப்பங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

#### (அ) அதிகாரமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) அமைச்சு அலுவலகத்தை சுத்திகரிக்கும் சேவையைப் பெற்றுக்கொள்வதற்காக 2015 ஆம் ஆண்டில் ரூபா 228,658 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அமைச்சினால் அது தொடர்பாக குறித்த கம்பனியுடன் எழுத்துமூல உடன்படிக்கையொன்று ஏற்படுத்திக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) உடன்படிக்கை செய்யப்பட்ட கடப்பாடொன்று இல்லாமல் அமைச்சின் அலுவலகத்தை செத்சிரிபாய நிர்வாக கட்டிடத்தின் 9 ஆவது மாடியில் நடாத்திச் செல்வதற்கு 2015 ஆம் ஆண்டில் 2 மாதங்களுக்கான வாடகையாக ரூபா 7,934,032 தொகை நகர அபிவிருத்தி அதிகாரசபைக்கு செலுத்தப்பட்டிருந்தது.

### 3.9 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை | உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 18 | 13 | 05 |
| (ii) | மூன்றாம் நிலை | 03 | 02 | 01 |
| (iii) | இரண்டாம் நிலை | 46 | 33 | 13 |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 24 | 03 |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிகம்/ ஒப்பந்தம் | 03 | 03 | - |
| | மொத்தம் | 97 | 75 | 22 |